FM

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2023

12 - ஆம் வகுப்பு

## வணிகவியல்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 45

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 X 1 = 10

1. செபியின் தலைமையகம் ................. ஆகும். அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி
2. நம்பிக்கையுள்ள ஊக வணிகர் என்பவர் அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) வாத்து
3. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ................
   அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி
4. பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலை மட்டங்களின் அளவு ......... .
   அ) அதிகம் ஆ) குறைவு இ) பன்மடங்கு ஈ) கூடுதல்
5. பின்வருவனவற்றுள் சரிபார்ப்பு செயல்பாடு எது?
   அ) திட்டமிடுதல் ஆ) ஒழுங்கமைத்தல் இ) பணிக்கமர்த்துதல் ஈ) கட்டுப்படுத்துதல்
6. இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பிணையம் எத்தனை முறை விற்கப்படலாம்
   அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை இ) மூன்று முறை ஈ) பலமுறை
7. மூலதன சந்தை ............... ஐ வழங்குவதில்லை.
   அ) குறுகிய கால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள் இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி
8. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு அ) காளை ஆ) கரடி இ) தன்வணிகர்கள் ஈ) கலைமான்
9. முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம், வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க .............. உதவுகிறது.
   அ) முதுகலை வணிக நிர்வாகம் ஆ) விதிவிலக்கு மேலாண்மை
   இ) முதுகலை வணிக மேலாண்மை ஈ) குறியிலக்கு மேலாண்மை
10. **கூற்று (A) :** நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார மேம்பாட்டிற்கு நிதிச்சந்தை வழிவகை செய்கிறது.
    **காரணம் (R):** நிதிச் சந்தையின்மூலம் குறுகிய கால மற்றும் நீண்ட கால நிதி உதவியினை நிறுவனங்கள் பெறுகின்றன.
    அ) A மற்றும் R சரியானது மற்றும் A க்கு R சரியான விளக்கம்
    ஆ) A மற்றும் R சரியானது மற்றும் என்பது A க்கு தவறான விளக்கம்
    இ) A சரியானது ஆனால் R தவறானது ஈ) A தவறானது ஆனால் R சரியானது

**II ஏதேனும் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**
**வினா எண். 17ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** 5 X 2 = 10

11. பங்கு சந்தை என்றால் என்ன?
12. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?
13. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
14. முக்கிய முடிவுப் பகுதிகள் (KRA) என்பது என்ன?
15. உடனடிச் சந்தை என்றால் என்ன?
16. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?
17. நிறுவனத்தில் கொள்கைகளை உருவாக்குவது மேலாண்மையா அல்லது நிர்வாகமா?

**III ஏதேனும் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**
**வினா எண். 24ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 3 = 15

18. புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன?
19. காளை மற்றும் கரடி - விளக்குக.
20. பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்?
21. செயலூக்கமளித்தல் என்பதன் பொருள் தருக.
22. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் மூன்று செயல்முறைகளைப் பட்டியலிடுக.
23. இரண்டாம் நிலைச் சந்தை - சிறுகுறிப்பு வரைக.
24. பரஸ்பர நிதி வணிகத்தில் ஈடுபடும் நிதி நிறுவனங்கள் மற்றும் வணிக வங்கிகளின் பெயர்களை குறிப்பிடுக.

**IV அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கவும்.** 2 X 5 = 10

25. செபியின் பணிகளை விவரி. ***(அல்லது)*** பங்குச் சந்தையின் பணிகளை விவரி.
26. பணச்சந்தைக்கும் மற்றும் மூலதனச் சந்தைக்கும் உள்ள வேறுபாடுகளை தருக. ***(அல்லது)*** நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner

**+2 வணிகவியல்** **முதல் இடைப்பருவத் தேர்வு ஜீலை -23**

1.(ஆ) மும்பை
2.(அ) காளை
3.(அ) வணிக வங்கி
4.(ஆ) குறைவு
5.(ஈ) கட்டுப்படுத்துதல்
6.(ஈ) பலமுறை
7.(அ) குறுகிய கால நிதியை வழங்குவதில்லை
8.(இ) தன்வணிகர்
9.(ஆ) விதி விலக்கு மேலாண்மை
10(அ) A மற்றும் R சரியானது மற்றும் A க்கும் R சரியான விளக்கம்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

11. **பங்குச் சந்தை** என்பது பெருநிறுவன மற்றும் பிற பத்திரங்கள் வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைப்பட்ட சந்தையாகும்.

12. **அரசுப் பத்திரங்கள் சந்தை:** அரசு அல்லது தங்கமுனை பத்திரங்கள் வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு அரசுபத்திரங்கள் என்று பெயர்.

13. **மேலாண்மைக் கருவிகள்:** கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம்

14. **முக்கிய முடிவுப் பகுதிகள் (KRA):** முக்கிய முடிவுப் பகுதிகள் என்பது ஒரு அமைப்பின் வலிமையைக் குறிக்கிறது. இலாபம், சந்தை நிலவரம், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவை முக்கிய முடிவுப் பகுதிகளுக்கு உதாரணங்களாகும்.

15. **உடனடிச் சந்தை:** ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும். தீர்வு உடனடியாக நடைபெறுகின்றது.

16. **மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?**
தனிநபர், நிறுமங்கள், அரசு வங்கிகள், இதர நிதி நிறுவனங்கள்

17. நிறுவனத்தின் கொள்கைகளை உருவாக்கவது **நிர்வாகம்**

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**

18. **புறத் தோற்றமற்ற பத்திர கணக்கு:**
நிறுமம் பதிவாளரால் காகித வடிவிலான பங்குச்சான்றிதழை அழித்து புறத்தோற்றமில்லா பத்திரங்களாக மாற்றி அவை முதலீட்டாளர் கணக்கில் பராமரிக்கப்படுவதே புறத்தோற்றமற்ற பத்திரக்கணக்கு எனப்படும்.

19. **காளை:-** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் மனப்பாங்கு கொண்டவர்.
**கரடி:-** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். கரடி அல்லது மண்டிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

20. **பணச் சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள்**
பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள், பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள், தனியார் மற்றும் பொதுத் துறை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், வணிக வங்கிகள், மாநில அரசுகள், பொது மக்கள், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கிகள்.

21. **செயலூக்கமளித்தல்** ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பது மற்றும் பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பது ஆகும்.

22. **குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் மூன்று செயல்முறைகளை பட்டியலிடுக.**
அமைப்பின் குறிக்கோள்களை வரையறுத்தல்.
குறிக்கோள்களுடன் வளங்களை ஒப்புநோக்குதல்.
செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல்.
குறிக்கோள்களை மறு ஆய்வு செய்தல்.

23. **இரண்டாம் நிலைச் சந்தை பற்றி சிறு குறிப்பு வரைக.**
ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.
இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.
நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் செயல்படும்.

24. **பரஸ்பர நிதி வணிகத்தில் ஈடுபடும் நிதி நிறுவனங்கள் மற்றும் வணிக வங்கிகள்:** நிதி நிறுவனங்களான **LIC, UTI** மற்றும் வணிக வங்கிகள் **SBI** மற்றும் **கனரா வங்கி** போன்றவை பரஸ்பர நிதி வணிகத்தில் ஈடுபடுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**

**25.அ. செபியின் பணிகளை விவரி**

போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலனை பாதுகாக்கிறது.
பங்குச் சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்.
பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.
நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளித்தல். மத்திய அரசால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்.

**25.ஆ. பங்குச் சந்தை பணிகளை விவரி.**

**உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:-** ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.

**பத்திரங்கள் மதிப்பீடு:-** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:-** பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.

**மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:-** மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

**மூலதன உருவாக்கம்:-** ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது.

| **26. அ. தன்மைகள்** | **பணச் சந்தை** | **மூலதனச் சந்தை** |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை |
| வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை | பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் |
| பண மதிப்பு | ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்சமதிப்பு ரூ25 இலட்சம் | ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100 |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மைய வங்கி மற்றும் செபி |

**26.ஆ. நவீன மேலாண்மைக் கோட்பாடுகள்:**

**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com